பக்கங்கள்: 16 விலை : 30/-

# காலைக்கதிர்
## Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி 09 வியாழக்கிழமை 25.08.2022 கதிர் 292

**இனிது ரகசியம் அல்ல!**

'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்பார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சியான இலங்கைத் தமிழரசுக்கட்சியை அதன்தலைமை வழிநடத்துவது பற்றிய சீத்துவத்தை அறிய இந்த ஒரு சோறு பதம் போதுமானது:-

☞2

# சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் ஜனாதிபதியுடன் நேற்று முதல் சுற்றுப் பேச்சு

## நாளை இரண்டாம் சுற்றுக் கலந்துரையாடல்



இலங்கை எதிர்கொண்டுள்ள நிதி நெருக்கடிக்குத் தீர்வு வழங்குவதற்காக சர்வதேச நாணய நிதியத்துடனான ஆரம்பகட்ட கலந்துரையாடல் ஒன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இலங்கை எதிர்கொண்டுள்ள நிதி நெருக்கடியின் தற்போதைய நிலைமை குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டது.

☞2

# நாட்டின் மொத்தக் கடன் பத்து லட்சம் கோடி ரூபா

## மீளுவதற்கான வழிவகைகள் குறித்து நாணய நிதியத்துடன் விரிவான பேச்சு

**கொழும்பு, ஓகஸ்ட் 25**

**இலங்கையின் வெளிநாட்டுக் கடன் சுமார் 2 ஆயிரத்து 900 கோடி டொலர்கள் (இன்றைய பெறுமதியில் சுமார் பத்து லட்சம் கோடி ரூபாவுக்கு சற்று அதிகம்) என்று கூறப்படுகிறது.**


☞4

## நல்லூர் தேர்த் திருவிழா இன்று



சரித்திரப்புகழ்மிக்க நல்லூர் கந்தசுவாமி கோவிலின் தேர்த் திருவிழா இன்று 25 ஆம் திகதி, காலை 7 மணியளவில்இடம்பெறுகின்றது

## கைதான காஷ்யப்ப தேரருக்கு நாளை வரை விளக்கமறியல்!



பிரதமர் அலுவலகத்துக்குள் அத்துமீறி பிரவேசித்தமை தொடர்பில் கைதுசெய்யப்பட்ட பலாங்கொட காஷ்யப்ப தேரர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

காஷ்யப்ப தேரர் குற்றப் புலனாய்வு திணைக்களத்தால் நேற்றுப் முற்பகல்

☞4

## வாவியிலிருந்து சடலம் மீட்பு!

தம்புள்ளையிலுள்ள வாவி ஒன்றில் இருந்து 35 வயதுக்கு மேற்பட்ட - அடையாளம் தெரியாத - ஆண் ஒருவரின் சடலம் நேற்றுப் பிற்பகல் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சடலம் கண்டெடுக்கப்பட்ட இடத்திலிருந்து சுமார் 100 மீற்றர் தொலைவில் குறித்த நபருடையது

☞2

# பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராக மீளக் கையெழுத்துப் போர்!

## சுமந்திரன் அறிவிப்பு



கொழும்பு,ஓக.25

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை ரத்துச் செய்யக்கோரும் கையெழுத்துப் பிரசாரம் மீண்டும் ஆரம்பிக்கப்படுவதாக 'சர்வஜன நீதி' (Justice For All) அமைப்பின் ஒருக்கிணைப்பாளரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற

☞2

## தாலியை அறுத்த சிப்பாய் சிக்கினார்

வவுனியா கனகராயன்குளம் பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண் ஒருவரின் கழுத்தில் இருந்த தாலிக் கொடியை சிவில் உடையில் வந்த இராணுவச்சிப்பாய் ஒருவர் அறுத்து விட்டு அங்கிருந்து தப்பிச் சென்ற வேளையில், போக்குவரத்து பொலிஸாரின்

☞4

## ஜோசப், ஜீவந்த உட்பட நால்வருக்குப் பிணை

ஜனாதிபதி செயலகத்துக்குள் பலவந்தமாகப் பிரவேசித்தனர் என்று குற்றம் சுமத்தப்பட்ட இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தால் பிணையில்

☞2

## கடன் அறவிடும் கெடுபிடிப் போக்கை மாற்றுமாறு சீனாவை கோருகிறார் ரணில்

இலங்கைக்கான கடன் நிவாரணம் தொடர்பில் தனது நிலைப்பாட்டை பெரியளவில் மாற்றிக் கொள்ளுமாறு சீனாவை இலங்கை வலியுறுத்துகிறது என்று இலங்கையின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜப்பானின் நிக்கேய் ஏசியாவிற்கு (Nikkei Asia) அவர் வழங்கிய பிரத்தியேக நேர்காணலில், இது தொடர்பில் சீனாவுடன் உடன்பாட்டை

☞2

## இடைக்கால பட்ஜெட்டை 30 இல் ரணிலே சமர்ப்பிப்பு



திருத்தப்பட்ட இடைக்கால வரவு - செலவுத் திட்டத்தை நிதியமைச்சர் என்ற முறையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஓகஸ்ட் 30 ஆம் திகதி நாடாளுமன்றத்தில்

☞2




காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் தெரிவு கடந்த செவ்வாயன்று நடைபெற்றமை தெரிந்ததுதான்.

அந்தச் சபைக்குத் தமிழரசுக் கட்சிப் பட்டியலில் பங்காளிக் கட்சி ஒன்றின் சார்பில் நியமிக்கப்பட்டு உறுப்பினரானவர் சதீஷ் என்பவர். முன்னர் நடந்த தலைவர் தெரிவில் கட்சியின் நிலைப்பாட்டுக்கு மாறாகத் தம் இஷ்டப்படி போட்டியிட்டவர். சபையின் உப தலைவராக இருந்த கட்சியின் சக உறுப்பினரைத் தாக்கினார் என்ற முறைப் பாடும் உண்டு. கடந்த பொதுத்தேர்தலில் கூட்டமைப்புக்கு மாறாக மாற்று அணிக்குப் பகிரங்கமாகப் பிரசாரம் செய்தார், தமிழரசு வேட்பாளர் சுமந்திரனுக்கு எதிராகக் கொடும்பாவி எரித்தார் என்றெல்லாம் ஏகக் குற்றச்சாட்டுகள் உண்டு.

அதனால் அவரை உறுப்புரிமையில் இருந்து நீக்கும் முடிவை தமிழரசு எடுத்தது. அதற்கு எதிராக - தமிழரசு கட்சிக்கும் அதன் தலைவர் மாவை சேனாதிராசாவுக்கும் எதிராக - அவர் நீதிமன்றத்திற்குப் போனார். தமிழரசின் முடிவுக்கு எதிராக இடைக்கால தடை உத்தரவையும் பெற்றார். அந்த வழக்கும் அந்தத் தடை உத்தரவும் இப்போதும் நிலுவையில் உள்ளன.

பங்காளிக் கட்சியின் தலைமையுடன் சதீஷ் சமரசம் செய்து கொண்டமையால் அவரை சம்பந்தப்பட்ட பங்காளிக் கட்சி மீண்டும் நகர சபைத் தலைவர் பதவிக்கு நிறுத்த முயற்சிக்கின்றது என்று அரசல் புரசலாகக் கதை அடிபட்டது.

கடந்த வார இறுதியில் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட கிளையின் கூட்டம் நடைபெற்றது. இவ்விடயம் அங்கு விரிவாக ஆராயப்பட்டது. தமிழரசுக்கு எதிராக வழக்கு போட்டவர், அந்த வழக்கு இன்னும் நிலுவையில் உள்ளது, அவர் தலைவர் தெரிவுக்கு நிறுத்தப்பட்டால் அவரை ஆதரிக்கக் கூடாது என மாவட்ட கிளை ஏகமனதாகத் தீர்மானம் எடுத்தது. எனினும் அச்சமயம் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா கூட்டத்தில் இருக்கவில்லை. அவர் அன்று நேரத்துடனேயே கூட்டத்திலிருந்து புறப்பட்டு விட்டார். எனினும் அந்தத் தீர்மானம் குறித்து அவருக்குத் தெரியப்படுத்தப்பட்டதாக அறியவந்தது.

ஆனால் அடுத்த நாள் பங்காளி கட்சித் தலைவர் தொலைபேசியில் ஒரு கோரிக்கை விடுத்ததும் தனது கட்சியின் மாவட்ட கிளை எடுத்த தீர்மானத்தைத் தூக்கிக் குப்பையில் கடாசினார் கட்சித் தலைவர் மாவையர். மாவட்டக் கிளையின் தீர்மானத்தை மீறி, தமது கட்சியின் நகர சபை உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் அழைப்பு எடுத்து, சம்பந்தப்பட்ட சதீஷுக்கு வாக்களிக்கும்படி வழிகாட்டல் உத்தரவும் விடுத்திருக்கின்றார் கட்சித் தலைவர். ஒரேயொரு உறுப்பினர் மட்டும் தொலைபேசியில் நேரடியாக செமத்தியாகக் கட்சித் தலைவருக்குக் கொடுத்தார் என்று கேள்வி. 'இது நியாயம் இல்லாத வழிகாட்டுதல். நான் வாக்களிப்புக்கு வரவும் மாட்டேன், கட்சியின் முடிவுக்கு மாறாக சதீஷுக்கு வாக்களிக்கவும் மாட்டேன்' என்று வெட்டு ஒன்று துண்டு இரண்டாக கூறிவிட்டார் அந்த உறுப்பினர். அவர் வாக்களிப்புக்கும் போகவில்லை.

அதனால் தேர்தல் முடிவு சமமானது. திருவுளச்சீட்டுப் போட்டு பாக்க வேண்டியதாயிற்று. திருவுளம் கட்சித் தலைவர் மாவையரின் ஒருதலைப்பட்ச முடிவை நிராகரித்து வந்து விட்டமைதான் தெய்வச் செயலோ தெரியவில்லை...!

தமக்கும், கட்சிக்கும் எதிராக வழக்குப் போட்டவர், அந்த வழக்கு நிலுவையில் இருக்கத்தக்கதாக, அவருக்கு வாக்களிக்கும் படி கட்சி தலைவரே பிரசாரம் செய்யும் புதுமையான கட்சி தமிழரசுதான். மாவையரின் தலைமையில் அதன் கட்டுக்கோப்புக் கொடிகட்டி பறக்கிறது...!

- மின்னல் -

## சர்வதேச நாணய .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் நாளை வெள்ளிக்கிழமை இந்தக் கலந்துரையாடலில் மற்றொரு சுற்றுக் கலந்துரையாடலை நடத்துவதற்கும், எதிர்காலத்தில் மத்திய வங்கி அதிகாரிகளுடன் தொழிநுட்ப விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சுக் குழுவின் தலைவர் பீட்டர் புரூபர், பிரதித் தலைவர் ஔசைரோ கொசையிகோ, சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான நிரந்தரப் பிரதிநிதி டுபாகன்ஸ் மற்றும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியும் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க உட்படப் பலர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

## பயங்கரவாதத் தடைச் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்திருக்கின்றார்.

1979 ஆம் ஆண்டு ஆறு மாதங்களுக்கு ஒரு தற்காலிக ஏற்பாடுகள் சட்டமாகக் கொண்டுவரப்பட்டு, பின்பதாக 40 ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து செயல்பாட்டில் உள்ள கொடூரமான பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கக் கோரி நாடு தழுவிய ரீதியாகக் கையொப்பப் பிரச்சாரம் ஒன்று இவ்வருடத்தின் தொடக்கத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

அன்றைய காலகட்டத்தின் அரசாங்கத்திற்கு எதிரான அதிருப்தியை நசுக்குவதற்கு இச்சட்டம் பயன்படுத்தப்பட்டதை நாம் கண்டதோடு, இது தொடர்ச்சியாக நடைமுறைப் படுத்தப்பட்டு இன்றும் தொடர்கிறது.

மிகச் சமீபத்தில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுப்பு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு மூன்று போராட்டக்காரர்களை தடுத்து வைப்பதாகவும், 'அறகலய' அல்லது போராட்டத்தின் பகுதியாக இருந்தவர்கள் மற்றும் அரசாங்கத்தை விமர்சிப்பவர்களுக்கு எதிராக ஓர் எச்சரிப்பின் செய்தியை அனுப்புவதாகவும் இது காணப்படுகின்றது.

இந்தச் சட்டம் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாக சர்வதேச மனித உரிமைகள் தர நிலைகள் மற்றும் விதிமுறைகளுக்கு இணங்க புதிய சட்டம் இயற்றப்படும் என்று அரசாங்கம் கடந்த காலங்களில் பல உறுதிமொழிகளை வழங்கியது. எவ்வாறாயினும், அண்மையில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட திருத்தச் சட்டமூலமானது அத்தகைய உத்தரவாதங்களுக்கு ஏற்றதாக இல்லாதிருப்பதோடு பயங்கரவாத தடைச் சட்டத்தில் உள்ள எந்தவொரு கடுமையான விதிகளையும் நிவர்த்தி செய்யத் தவறியுள்ளது.

உண்மையான சீர்திருத்தங்களின் தோல் விகள் மற்றும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் தொடர்ச்சியான பயன்பாடு என்பன மிகவும் கவலையளிக்கிறது. இத்தகைய தொரு சூழலில் பயங்கரவாத தடைச் சட்டத்தை ரத்து செய்யக் கோரி கையெழுத்து பிரசாரத்தினை மீண்டும் தொடங்குகிறோம். - என்று சுமந்திரன் தெரிவித்துள்ளார். வியாழன் (இன்று) காலை 11 மணிக்கு பொது நூலகத்தின் கேட்போர் கூடத்தில் இது தொடர்பான செய்தியாளர் சந்திப்பு ஒன்று நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வாவியிலிருந்து ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனச் சந்தேகிக்கப்படும் பெல்ட் மற்றும் சில ஆடைகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

## ஜோசப், ஜீவந்த உட்பட .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுவிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி குற்றம் சுமத்தப்பட்ட முன்னிலை சோலிசக் கட்சியின் பிரசார செயலாளர் துமிந்த நாகமுவ, அருட்தந்தை ஜீவந்த பீரிஸ் மற்றும் நஸீன் குணவர்தன ஆகியோரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். நால்வரும் நேற்று தலா 5 இலட்சம் ரூபா பெறுமதியான சுரீரப் பிணையில் விடு விக்கப்பட்டுள்ளனர்.

## கடன் நிலுவையை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எட்டுவது எளிதான காரியம் அல்ல என்பதை ஏற் றுக்கொண்டுள்ளார்.

பொருளாதாரத்தில் திவாலாகிவிட்ட இலங் கையின் சார்பில், நாட்டின் நிதிக் குழுவை வழிநடத்தும் ரணில் விக்கிரம சிங்கவுக்கு, இது ஒரு வலிமையான சவாலாக அமைந்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையில் இன்று(நேற்று) புதிய சுற்றுக் கலந்துரையாடல் ஆரம்பமாகியுள்ளது.

இந்தநிலையில், ஏற்கனவே பெற்ற கடனை மறுசீரமைக்க வேண்டியதன் அவசியத்தை, சீன அரசாங்கத்திடம் தெரிவித்துள்ளதாக ரணில் விக்கிரமசிங்க நிக்கேயிடம் கூறியுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான சந்திப்புக்கு மத்தியில், சீனாவின் கடன் மறுசீரமைப்புக் காரணியே இலங்கையின் பொருளாதார அதிர்ஷ்டத்தை வழிவமைக்க உள்ளது என்பது யதார்த்தமான விடயமாகும்.

இலங்கைக்குப் பல பில்லியன் டொலர் பிணை எடுப்பு வழங்குவதற்கான வாய்ப்புகள் குறித்து, ஏற்கனவே சர்வதேச நாணய நிதியம், கருத்துக்களை வெளியிட்டுள்ளது.

அதில் பிணை எடுப்புக்கு முன்னர், கடன் வழங்கியோரிடம் போதுமான கடன் மறுசீரமைப்பு உத்தரவாதங்களைப் பெற்றுக் கொள்வது அவசியம் என்று நிதியம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையின் மொத்த வெளிநாட்டு கடனில் கிட்டதட்ட 44 சதவீதம் சீனாவிடமிருந்து பெற்ற கடன்களாகும்.

இலங்கையின் தற்போதைய நிலுவையில் உள்ள வெளிநாட்டுக் கடன் 51 பில்லியன் டொலர்கள் ஆகும். தற்போது நாட்டில் 300 மில்லியன் டொலர்களே அந்நிய செலாவணியாக உள்ளன.

இதனைக் கொண்டு, உணவு, எரிபொருள் மற்றும் மருந்து இறக்குமதிகளை மேற்கொள்ளமுடியாது.

இந்தநிலையில் கடந்த ஜூலை மாதத்தில் உணவுப் பணவீக்கம் 82 வீதமாக உயர்ந்துள்ளது. இவ்வாறான சூழ்நிலையில் சீனாவுடன் முன்னர் மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் கொண்டிருந்த உறவு தற்போது வீழ்ச்சி கண்டிருக்கிறது.

அண்மையில் சீன கப்பல் ஹம்பாந்தோட்டைக்கு வந்தபோது, இந்தியாவின் அதிருப்தியால், ஏற்பட்ட இலங்கையின் செயற்பாடு, இந்த வீழ்ச்சியை மேலும் ஆழமாக்கியது.

இந்தச் சூழ்நிலையிலேயே சர்வதேச நாணய நிதிய பிணை மீட்புக்கு சீனாவின் பெரிய மாற்றத்தை இலங்கை எதிர்பார்ப்பதாக ரணில் குறிப்பிட்டுள்ளார்.

## இடைக்கால பட்ஜெட்டை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமர்ப்பிக்கவுள்ளார்.

அன்றைய தினம் பிற்பகல் 1 மணிக்கு நாடாளுமன்றம் கூடும் எனவும், வரவு - செலவுத் திட்ட உரை பிற்பகல் 2 மணி வரை நடைபெறும் எனவும் நாடாளுமன்றத் தகவல் தொடர்பு பிரிவு அறிவித்துள்ளது.

செப்டெம்பர் முதலாம், இரண்டாம் திகதிகளில் வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதம் காலை 9.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.

இதேவேளை, எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு நாடாளுமன்றம் கூடவுள்ளது. அப்போது மின்சாரக் கட்டண அதிகரிப்புத் தொடர்பான ஒத்திவைப்பு வேளை விவாதம் நடைபெறவுள்ளது.





2014 ஆம் ஆண்டு முதல்
ஆயிரக்கணக்கான வெற்றிகரமான
திருமணங்கள்
மூவாயிரத்திற்கும் மேற்பட்ட
வரன்கள்



அருந்ததி
இணைய திருமண சேவை
+94777164524 | www.arunthathee.com
20, கே.கே.எஸ் வீதி கொக்குவில் | 18, ராமகிருஷ்ணா அவினியு, வெள்ளவத்தை

மலையக மக்களின் அன்பு கலந்த
குறிஞ்சி கோப்பி



நீங்களும் கோப்பியினை பெற்றுக்கொள்ள, மேலதிக விபரங்களுக்கும் அழையுங்கள்
+94 76 44 38 620

அண்ணா விரைவுப் பொதிகள் சேவை




075 330 5500, 070 330 5500
076 122 1566

யாழ்ப்பாணம் - நல்லூர்- வட்டுக்கோட்டை - சங்கானை - சுன்னாகம் - ஆவரங்கால் -
நெல்லியடி - கைதடி - சங்கத்தானை - பளை - கிளிநொச்சி - புதுக்குடியிருப்பு -
முல்லைத்தீவு - கனகராயன்குளம் - மல்லாவி - மன்னார் - வவுனியா - திருகோணமலை
மூதூர் - கொழும்பு

POST YOUR AD yarlads.com
உங்கள் விளம்பரங்களை இலவசமாகப் பதிவிட

# குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி ஆகிய பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா,
ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557



பேர்ச் ~~180,000/- (USD 500)~~
SPECIAL DISCOUNT 150,000/-

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## சமூகக் கடமையும் ஆற்றுக!

நல்லூர் கந்தசாமி ஆலயத் தேர் திருவிழா இன்று.

பல்வேறு இன, மொழி, மத நடைமுறைகளைப் பின்பற்றும் மக்கள் வடக்கில் வாழ்ந்தாலும் கூட, நல்லூர் கந்தசாமி ஆலயத் திருவிழா – குறிப்பாக ரதோற்சவம் வடக்கில் தேசியப் பெருவிழாவாக – கொண்டாட்டமாக – பார்க்கப்படுகின்றது.

வடக்கின் பண்பாட்டுக் குறியீடாக – கலாச்சார மையமாக – விளங்குவது நல்லூர் ஆலயம்.

வடக்கு யாழ்ப்பாணத்தின் வாழ்க்கை முறை கந்தபுராணக் கலாசாரம் என்றே அழைக்கப்பட்டு வந்தது. அந்தக் கலாசாரத்தின் ஊற்றுக்கண் மையமாக திகழ்வது நல்லூர்.

அது அது தனிப்பட்ட நிர்வாகத்துக்குரிய மத வழிபாட்டு தலம். ஆயினும் கூட, அதுவே குடாநாட்டின் வாழ்வியல் குறியீட்டு அடையாளமாகவும் போற்றப்படுகின்றது.

அந்த ஆலயத்தின் பக்திச் சிறப்புகள் ஒருபுறம் என்றால், மறுபுறம் ஆலய நிர்வாக முகாமைத்துவம் தேசிய ரீதியில் முன்மாதிரியாக மெச்சப்படுகின்றது.

ஒழுங்கு, கட்டுப்பாடு, கனகச்சிதமான நேர முகாமை போன்றவை இலங்கையின் தனித்துவ நிறுவனங்களுக்கு எல்லாம் முன்மாதிரி எனலாம்.

வடக்கு மக்களின் மத பாரம்பரியத்தைப் பிறர் பார்த்து மெச்சும் வண்ணம் முன்னுதாரணமாக திகழ்வது நல்லூர் ஆலய நடைமுறைகள் என்றால் அதில் தவறு இல்லை.

புனிதத்தை மிக நுணுக்கமாகப் பேணும் நல்லூரின் தனிச்சிறப்பு யாவரையும் பக்திவழி நெறிப்படுத்துவது.

அங்கு வர்த்தகத்துக்கு – பணத்துக்கு – முன்னுரிமை கிடையாது; வணக்கத்திற்குத்தான் முக்கிய இடம்.

ஏழை – பணக்காரன், வசதியானவன் – வசதியற்றவன், அரசியல்வாதி – தொண்டன், சமூகத்தில் முன்னுரிமையாளர் என்ற வேறுபாடு ஏதும் அங்கு இல்லை. கடவுளின் முன் இந்த அற்பச் சிறப்புகளுக்கு எல்லாம் இடமில்லை என்பதை – யாவருக்கும் சமத்துவம் என்ற கோட்பாட்டை – அப்பட்டமாக நிரூபித்து நடைமுறையில் காட்டி நிற்பது நல்லூரின் நிர்வாக ஒழுங்கு முறைத் தனித்துவம். கோயிலின் எஜமானராயினும், நாட்டின் தலைவராயினும், அல்லது உயர் மட்டப் பிரமுகராயினும், நல்லூரான் முன் எல்லோரும் சமமே என்ற உயர் மனிதநேயக் கொள்கை, செயல்முறையில் பின்பற்றப்படும் மேன்மையான தலம் அதுவே.

ஈழத்தின் தலை சிறந்த சித்தர்களான செல்லப்பா சுவாமியும், அவரது சீடரான யோகர் சுவாமியும் தடம் பதித்து வாழ்ந்த கோயிலும் அதன் வீதியும் நல்லூர்தான்.

இலங்கையில் புகழ்பெற்ற கந்தன் திருத்தலங்களுக்குச் சிறப்பு பெயர்கள் உண்டு. கதிர்காமத்தில் கற்பூரக் கந்தன். சன்னதியில் அன்னதானக் கந்தன். மாவையில் அபிஷேகக் கந்தன். அந்த வகையில் நல்லூரில் அலங்கார கந்தன்.

அப்பெருக்கேற்ப உற்சவ காலங்களில் அவன் பக்தர்களுக்கு அளிக்கும் அலங்காரக் காட்சிகள் கண்கொள்ளாதவை.

ஒரு ரூபாய்க்கு அர்ச்சனை செய்ய முடியும் என்ற உயர் நிலைமை காணப்படும் ஒரே ஈழத்துத் திருக்கோயில் நல்லூர்தான்.

நிதிக்குத் தலை வணங்காத நிர்வாகத்திற்கு, நிதியைக் கொட்டிக் கொடுத்து, ஒழுங்கை நிலை நாட்டுகிறான் கந்தன். அதுவே அவனது அருள் சிறப்பு.

இவ்வளவு பெருமைமிக்க முன்மாதிரி அடையாளமாகத் திகழும் நம் நல்லூர் ஆலயத்தின் நிர்வாகம் ஆலய நிர்வாகத்திற்கு அப்பாலும் முன்மாதிரியாகச் செயல்பட வேண்டும் என்பதே பலரின் கோரிக்கை. உரிமையுடன் கூடிய எதிர்பார்ப்பும் கூட. வடக்குத் தமிழரின் சமூகக் குறியீடாக இருக்கும் நல்லூர் ஆலயம், சமூக, சமுதாயக் கடமைகளையும் பொறுப்பேற்றுச் செயற்பட – செயற்படுத்த – முன்வர வேண்டும். அது அதன் கடப்பாடும் கூட. அதற்கு நல்லூர் முருகன் வழி காட்ட வேண்டும்.

# கடற்றொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்க ஜனாதிபதி ரணில் இணக்கம்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



கடற்றொழிலாளர்களின் பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையிலான சந்திப்பிற்கு விரைவில் ஏற்பாடு செய்யப்படும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மண்ணெண்ணெயின் விலை அதிகரிப்பை கடற்றொழிலாளர்கள் சமாளிக்கும் வகையில் நிவாரணம் வழங்குவதற்கும் ஜனாதிபதி இணக்கம் தெரிவித்திருக்கிறார் எனவும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் ஒருங்கிணைப்பாளரின் ஏற்பாட்டில் நாடளாவிய ரீதியில் உள்ள கடற்றொழில் சங்கங்களின் பிரதிநிதிகளுடனான சந்திப்பு செவ்வாய்க்கிழமை இடம்பெற்றிருந்தது.

இந்தச் சந்திப்பில் கருத்து தெரிவித்த கடற்றொழில் சங்கங்களின் பிரதிநிதிகள், தமது தொழில் செயற்பாடுகளுக்குத் தேவையான மண்ணெண்ணெய் மற்றும் டீசல் போன்றவைத் தாராளமாகக் கிடைக்க வேண்டும் என்று வலியுறுத்தியதுடன், மண்ணெண்ணெயின் விலையேற்றம் தொடர்பிலும் மீள் பரிசீலனை செய்யப்பட வேண்டும் என்றும் கேட்டதுடன், ஜனாதிபதியைச் சந்தித்துக் கலந்துரையாடுவதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட வேண்டும் எனவும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை முன்வைத்திருந்தனர்.

இந்நிலையில் இந்த விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதிக்கும் கடற்றொழில் அமைச்சருக்கும் இடையிலான கலந்துரையாடலில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இதன்போது கடற்றொழிலாளர்களின் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி, அவை தொடர்பான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைக் கேட்டுக்கொண்டார்.

அதேவேளை, அண்மைய நாள்களில் அதிகரித்துள்ள இந்தியக் கடற்றொழிலாளர்களின் எல்லை தாண்டிய சட்ட விரோத தொழில் நடவடிக்கைகள் தொடர்பாக இந்திய மத்திய மற்றும் மாநில அரசுகளுடன் கலந்துரையாடி தீர்க்கமான முடிவைக் காண்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதாகவும், விரைவில் இந்தியக் கடற்றொழிலாளர் விவகாரத்துக்குத் தீர்வு காணப்படும் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி அபிவிருத்தி தொடர்பாகக் கடற்றொழில் அமைச்சரும், கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவருமான டக்ளஸ் தேவானந்தா விசேட கவனம் செலுத்தியுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக்குழுவை 2020 ஆம் ஆண்டு பொறுப்பெடுத்த சிறிது காலத்திலேயே மாவட்டத்தின் நீண்டகாலப் பிரச்சினையாக இருந்து வந்த இரண்டு கல்வி வலயங்களை உருவாக்கும் திட்டத்தை நிறைவேற்றியிருந்த அமைச்சர் டக்ளஸ், புதிதாக உருவாக்கப்பட்ட கிளிநொச்சி வடக்கு மற்றும் தெற்கு வலயங்களின் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், கல்விசார் உத்தியோகத்தர்கள், அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் உள்ளிட்டோரை தனித்தனிக் குழுக்களாகச் சந்தித்து அந்தந்த வலயங்களின் தேவைகள் தொடர்பாகவும் விசேடமாக ஆராய்ந்துள்ளார்.

இதன்போது, வலயகக் கல்விப் பணிமனை மட்டத்திலான தேவைகள் முதற்கொண்டு, பாடசாலைகளின் பௌதீக, ஆளணி மற்றும் இதர பற்றாக்குறைகள், உடனடியாக நிறைவேற்றப்படவேண்டிய விடயங்கள் பற்றியும் விரிவாகக் கலந்துரையாடிய அமைச்சர், அவற்றுக்கான தீர்வை படிப்படியாகப் பெற்றுத்தருவதாக உறுதியளித்துள்ளார்.

### நாட்டின் மொத்தக் கடன் ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை வந்துள்ள சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள. நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்த போது இந்தக் கடன் நெருக்கடியிலிருந்து இலங்கை மீளுவது தொடர்பான 'கடன் நிவாரணப் பொதியை' வழங்குவது சம்பந்தமாகக் கலந்துரையாடப்பட இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த மூன்று மாதங்களில் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் இலங்கைக்கு விஜயம் செய்வது இது இரண்டாவது தடவையாகும்.

நேற்று ஆரம்பமான கலந்துரையாடலின் பின்னர் இருதரப்புக்கும் இடையில் அதிகாரிகள் மட்டத்தில் இணக்கப்பாடு எட்டப்படலாம் என தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை தற்போது எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடியில் இருந்து ஓரளவு நிவாரணம் பெற சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து மூன்று பில்லியன்(300 கோடி) டொலர்களை எதிர்பார்க்கிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள், மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க மற்றும் அதன் அதிகாரிகள் நாட்டின் வெளிநாட்டுக் கடனை மறுசீரமைப்பதற்காக தெரிவுசெய்யப்பட்டுள்ள ஆலோசகர்களான வெளிநாட்டு நிபுணத்துவப் பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடவுள்ளனர்.

இலங்கைசெலுத்தவேண்டிய இருதரப்புக் கடனின் அளவு சுமார் 9.6 பில்லியன் டொலர்கள்மற்றும்சர்வதேச இறையாண்மை பத்திரங்கள் மற்றும் தனியார் கடன்களின் தொகை 19.8 பில்லியன் டொலர்கள் என நிதி அமைச்சின் தரவுகளை மேற்கோள்காட்டி ரொய்ட்டர்ஸ் செய்தி சேவை தெரிவித்துள்ளது.

இலங்கை தனது இருதரப்பு கடனில் பெரும்பகுதியை ஜப்பானுக்கும் சீனாவுக்கும் செலுத்த வேண்டியுள்ளது.

இதில், சீனாவுக்கு செலுத்த வேண்டிய கடன் 3.5 பில்லியன் டொலர்கள். அவர்களிடமிருந்து பெறப்பட்ட வர்த்தகக் கடன்களையும் சேர்த்துப் பார்க்கும் போது, இலங்கையின் மொத்த வெளிநாட்டுக் கடனில் ஐந்தில் ஒரு பங்கு சீனாவிடம் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

### கைதான காஷ்யப்ப .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைதுசெய்யப்பட்டு கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

இதையடுத்து, அவரை நாளை வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவு பிறப்பித்தார்.

### தாலியை அறுத்த ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உதவியுடன் விரைந்து செயற்பட்ட அப்பகுதி பொதுமக்களால்வர் துரத்திப் பிடிக்கப்பட்டார் என்று கூறப்படுகின்றது.

சிவில் உடையில் நடமாடிய இராணுவச் சிப்பாய் அவர் என்பது உறுதிப்படுத்தப்பட்ட நிலையில், பொதுமக்களால் கனகராயன் குளம் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# தேர்திருவிழா சிறக்க வாழ்த்துவோர்



S.Thumilan - Group Chairman
ACA, ACMA (UK), ACCA, CGMA
MCSI (UK), CPA (AUS),
FMAAT (SL), ACS

## Blue Ocean™ GROUP OF COMPANIES

SRI LANKA'S LARGEST CONDOMINIUM DEVELOPER




NO. 45, KING ALFRED PALACE - COLOMBO 03

Discover the privileged locations
That embrace the ultimate
Luxurious living...



NO. 15A, LAYARDS ROAD - COLOMBO 04



NO. 35, RAMAKRISHNA ROAD - COLOMBO 06

10+ LOCATED CITIES | 35+ CONDO PROJECTS | 1400+ CONDO UNITS



FACULTY OF ENGINEERING AND BIO SYSTEM TECHNOLOGY
at Ariviyal Nagar, Kilinochchi.



FACULTY OF AGRICULTURE AND ENGINEERING
University of Jaffna in Kilinochchi



WATER BOARD BUILDING - Jaffna



COURT COMPLEX - Chavakachcheri



FACULTY OF MEDICINE BUILDING
University of Jaffna



ROAD DEVELOPMENT DEPARTMENT OFFICE
Jaffna

## LINK ENGINEERING

A LEGENDARY CONSTRUCTION TYCOON SINCE 1981

Link Engineering, a member of Blue Ocean Group of Companies, is one of the first few construction companies in Sri Lanka with experience spanning over four decades. They have been recognized with many awards for their construction excellence over the years. They continue to hold their unbeaten records and determine to achieve more for the future.

A RENOWNED CONSTRUCTION LEGEND · 40+ YEARS · CONSTRUCTION EXCELLENCE

40+ YEARS OF CONSTRUCTION EXCELLENCE
A RENOWNED CONSTRUCTION LEGEND



We, Make your Trips Memorable

BLUE OCEAN TRAVELS
A DESTINATION FOR THE NEW MILLENNIUM

No.9A, De Fonseka Place,
Bambalapitiya, Colombo 04.
www.botravels.com



Furniture, Carpentry & Aluminium

CONTESSA INTERIOR

No.105, St. Peter's Road,
Koralawella, Moratuwa, Sri Lanka.
www.contessa.lk



Concrete Ready-Mix Plant

LINK READYMIX

No. 21/1, Kerathivu Road,
Navatkuli, Jaffna, Sri Lanka.
www.linkreadymix.lk



Buy / Sell / Build the Property of Your Dreams

Blue Ocean REAL ESTATE

No. 21/1, Kerathivu Road,
Navatkuli, Jaffna, Sri Lanka.
www.propertyocean.lk


**PLATINUM OFFICE**
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotline : +94 777 546 546

**REGIONAL OFFICE**
No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna.
Tel : +94 212 050 999 | Hotline : 94 77 154 6539

**FACTORY / WORKSHOP**
No. 105, St. Peter's Road, Koralawella, Moratuwa, Sri Lanka.
Tel : +94 112 722 217 | Hotline : +94 777 546 546

இலங்கை மற்றும் இந்திய உணவுகளை குடும்பத்துடன் உண்டு மகிழ

# சமுத்திரா மஹால் & சைவ உணவகம்



நவீன வசதிகளுடன் கூடிய மண்டபம்,
உணவு வகைகள், சொகுசு ஒழுங்கு
படுத்தல்கள், நட்புறவான
ஊழியர்களுடன் எமது சேவை
யாழ்மண்ணில்

0094776529583
0212243536

கே.கே.எஸ் வீதி, மருதனார்மடம்,
சுன்னாகம்.

- சிவஸ்ரீ.தி.மயூரகிரி சிவாச்சார்யார் -



# நல்லூர் - அழகு ததும்பும் அற்புதத் திருக்கோயில்



## கோயில் சொல்லும் கதை

கி.பி 1730ஆம் ஆண்டு இருக்கும். ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தை ஆண்ட காலம். அரசின் செல்வாக்குடன் அரச கச்சேரியில் சிறாப்பர் என்ற பதவியிலிருந்தவர் தொன் யுவான் மாப்பாண முதலியார். அவர் குதிரை வண்டியில் வேலைக்குப் புறப்படத் தயாராகிறார். வீட்டு வாசலில் ஒரு ஐயர் தயக்கத்தோடு வந்து நிற்கிறார்.

பஞ்சகச்சத்தோடு வந்து நிற்கும் அந்தப் பிராமணரை பார்த்ததும் வணங்கி மலர்ச்சியுடன் உள்ளே வரவேற்கிறார் முதலியார். இந்த வரவேற்பை எதிர்பாராத பிராமணர் அதிர்ச்சியோடு உள்ளே வருகிறார். முதலியாரின் மனைவியும் வந்து வணக்கம் சொல்கிறார். பிராமணர் நிமிர்ந்து பார்க்கிறார். மாப்பாணர் மனைவி திலகம், விபூதி, தாலியுடன் திகழ்கிறார். முதலியாரைக் கவனமாக பார்க்கிறார். அவர் நெற்றியில் விபூதி தெரிகிறது.

முதலியார் கிறிஸ்தவ பெயரில் கிறிஸ்தவர்போல இருந்தாலும் உள்ளத்தால் சைவர் என்று பலர் சொல்லியிருப்பினும், அதனை உண்மை என உறுதி செய்து கொண்டு வந்த கிருஷ்ணையர், தனக்கு ஓர் உதவி வேண்டும் என்கிறார்.

முதலியார் பணிவுடன் என்ன என்று கேட்க, நல்லூரில் முருகனுக்கு கோயில் அமைக்க அரசிடம் அனுமதி பெற்றுத்தர வேண்டும் என்கிறார்.

கண்களில் நீர் கசிய, மெய் சிலிர்த்துப்போன முதலியார் வாயில் ‘அது என் பாக்யம்... பாக்யம்’ என்ற சொற்களே வெளி வருகிறது. தான் கந்தபுராணம் அரங்கேறிய காஞ்சியிலிருந்து வந்த தொண்டை மண்டல முதலியார் மரபினன். எனவே, கந்தவேளுக்கு பணி செய்வது தம் வழி வழி மரபு தான் என சொல்கிறார்.

குறித்த ‘குருக்கள் வளவு’ என்ற காணித்துண்டு ஒன்றை முதலியாரே விலைக்கு வாங்குகிறார். முருக பக்தர்களும் இணைகின்றனர். அம்பலவாணர் சுப்பிரமணியம் என்று முருகன் பெயரில் காணித் தோப்பை பதிகின்றனர்.

(07ஆம் பக்கம் பார்க்க)






# நல்லூர் - அழகு ததும்பும் அற்புதத் திருக்கோயில்

(06 பக்கத் தொடர்ச்சி)

### பழைய கோயில்

ஏற்கனவே, தமிழரசர் காலத்தில் இன்றைய முத்திரைச்சந்திக்கு கிழக்காக கிறிஸ்தவ தேவாலயம் இருக்கிற இடத்தில் கந்தசுவாமிக்கு பெரிய கோயில் இருந்தது. அதை பறங்கியர் 1619களில் இருந்த அடையாளமே இல்லாமல் அழித்து விட்டு தேவாலயம் கட்டியிருந்தனர்.

அப்போது கோயிற் பணிவிடைக்காரர் சில பொருர்களை எடுத்துக்கொண்டு மட்டக்களப்புக்கு ஓடினர், பிராமணர்கள் உயிரைக் கையிற் பிடித்துக்கொண்டு நீர்வேலிக்கு ஓடினர் என்று யாழ்ப்பாண வைபவ மாலை, யாழ்ப்பாண சரித்திரம் என்பன சொல்கின்றன.

எனவே, இப்போது அந்தப் பறங்கியரின் தேவாலயம் ஒல்லாந்தர் கால தேவாலயமாகி இருக்க அதற்கு அருகே முருகவழிபாடு செய்யத் தொடங்கியிருந்தனர். இது கிறிஸ்தவ சார்பு அரசியலாருக்கு பெரிய இடர்பாடாக இருந்தது.

எனவே, குறித்த வழிபாட்டை இடம் நகர்த்த வேண்டும் என்பதோடு முதலியாரின் செல்வாக்கும் ஒன்று சேர கோயில் கட்ட அனுமதி கிடைத்தது. கோயில் கட்டினர். கும்பாபிஷேகம் செய்தனர். மாப்பாண முதலியார் இரகுநாத மாப்பாண முதலியார் என்ற உண்மைப் பெயருக்கு மாறினார்.

### நல்லூரின் வளர்ச்சி

காலம் ஓடியது. கோபுரங்கள் எழுந்தன. உயர்ந்த மதில்களுடன் பிரகாரங்கள் ஏற்பட்டன. தேரோடியது. நல்லூர் கந்தசுவாமி கோயில் நிமிர்ந்தது. அவனது அருளாட்சி நல்லூரை தலமாகக் கொண்டு அகிலமெங்கும் நடக்கத்தொடங்கியது.

இப்போது இந்த மாப்பாணர் மரபின் 11ஆவது கோயிற் பரிபாலகராக குமரேச சயந்தன் மாப்பாண முதலியார் பணியாற்றி வருகிறார்.

ஆண்டு தோறும் புதுப்பிக்கப்படுகிற இக்கோயிலில் கருவறை மேல் கேரளப் பாணி விமானம் அமைந்திருக்கிறது. புதிய குமார கோபுரம் உள்ளடங்கலாக ஐந்து இராஜகோபுரங்கள் அமைந்துள்ளன. ண்முகரது சந்நிதி தங்கக்கூரை வேயப்பட்டிருக்கிறது.

ஆகவே, தற்கால நல்லூர் மடாலயம் அல்ல. கர்ப்பக்கிரகத்தில் விளக்கொளியில் வேற்பெருமான் தம்மிரு சக்தியரோடு காருண்ய மூர்த்தியாகக் காட்சி தருகிறார். சித்தர்களின் அரூப வாசம் அங்கே இணைவதால் அருள் பிரவாகிக்கிறது.

(07ஆம் பக்கம் பார்க்க)












# தேர்திருவிழா சிறக்க வாழ்த்துவோர்


## தேசிய எரிவாயு ஏக விநியோகஸ்த்தர்

LITRO GAS

# S.V. முருகேசு



செங்கொடி காற்றில் அசைய
சேவலும் மயிலும் மகிழ
செங்கதிர் வானம் மின்ன
செந்தமிழ் முருக னாகி
செங்கரும்பு, வாழை, தொங்கு
செவ்விள நீரும் கட்டி
சங்கரன் மகனார்; தேரில்
சந்தனம் மணக்க வாறார்.




தூய்மையானதும் நீண்ட காலம் பாவிக்க கூடியதுமான இல்லத்தரசிகளின் ஒரே தெரிவு

**S.V.M (PVT) LTD**
122, Damstreet, Colombo-12.

**S.V.M. DISTRIBUTORS ( PVT) LTD**
160, Standely Road, Jaffna.

**SVMURUGESU**
154, Hospital Road, Jaffna.

**SVM FUEL MART**
173, 175, Palaly Road, Thirunelvely, Jaffna.

**SVMURUGESU ( PVT) LTD**
106, Hospital Road, Jaffna.

**S.V.M. ENTERPRISE (PVT) LTD**
288, A9 Road, Karadipokku, Killinochi.

# கிருபா லேணர்ஸ்

## කිරුබා ලර්නර්ස් KIRUBAA LEARNERS

அரச அங்கிகாரம் பெற்ற வட மாகாணத்தின் முதல் தர கனரக வாகன பயிற்சிப் பாடசாலை.



அ.கிருபாகரன்
-அதிபர்-

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
- மும்மொழியிலும், உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறைக் கட்டணங்கள்.
- இரவிலும் வாகன பயிற்சிகள்.




**தலைமையகம்**
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 4353 / 0777 22 5292
kirubalearners@gmail.com
www.kirubalearners.com

| | | | |
|---|---|---|---|
| சுன்னாகம் 021 224 2022 | நெல்லியடி 021 226 0700 | பருத்தித்துறை 021 226 1100 | ஆவரங்கால் 021 222 6688 |
| சித்தங்கேணி 021 225 2500 | சாவகச்சேரி 021 227 0700 | பூநகரி 021 320 1818 | முழங்காவில் 021 300 6544 |
| விஸ்வமடு 021 320 1515 | மன்னார் 023 225 1656 | கிளிநொச்சி 021 228 5505 | வவுனியா 024 222 7777 |

# நல்லூர் - அழகு ததும்பும் அற்புதத் திருக்கோயில்



(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

## பைரவரின் சிறப்பு

நல்லூரில் ஈசான திசையில் கோயிலின் க்ஷேத்திர பாலரான பைரவர் கிழக்கு நோக்கி காட்சி தருகிறார். இவர் தான் அலங்கார கந்தனின் பொக்கிங்களுக்கெல்லாம் காவற் தெய்வம். எக்காரியம் செய்யினும் அவற்றை தடையின்றி நடத்திக் கொடுக்கும் தெய்வம்.

ஆவணிப் பெருவிழாவின் ஆரம்பமும் நிறைவும் இவரது உலாவோடு தான் ஆரம்பமாகி நிறைவு பெறும்.

## ஆவணிப் பெருவிழா - வழிபாடுகள்

நல்லூர் பெருவிழா நம் தேசியத்திருவிழா. ஆடி அமாவாசை கழிந்த ஆறாம் நாள் தொடங்கி இருபத்தைந்து நாள்கள் இந்த மகா உற்சவம் நடக்கிறது.

நேர முகாமை, அரசியல் – வணிக தலையீடுகளுக்கும் முதன்மைக்கும் இடம் தராமை, கட்டுப்பாடு, புனிதம் இவைகளோடு கூடிய இந்த அழகு கந்தனின் பெருவிழா மட்டுமல்ல நித்திய பூஜை வழிபாடுகளும் வியப்பை தருவன.

## ஷண்முகநாத வள்ளல்

நல்லூரின் தலைமைத் தெய்வம் ண்முக வள்ளல். பொற்சபையில் காட்சி தரும் இவருக்கு நல்லூரில் வழங்கப்படும் முதன்மை சிதம்பரத்தில் ஆனந்த நடராஜ மூர்த்திக்கு வழங்கப்படும் முதன்மை போன்றது.

இவரது சபைக்கு முன்னே இரண்டு இராஜகோபுரங்கள், பின்னே இரண்டு இராஜகோபுரங்கள் அணி செய்கின்றன. அவன் முன்றலில் ண்முக புஷ்கரணியும் அருகே கூப தீர்த்தமும் காணப்படுகின்றன.

கோயில் தல விருட்சமாகக் கருதக்கூடிய காஞ்சி மாவை தழுவும் காற்று ண்முகநாதனை தழுவும். 1918ஆம் ஆண்டளவில் ஸ்தாபிக்கப்பட்ட இப்பெருமான் நூற்றாண்டு கண்ட மூர்த்தி.

அழகிய சித்ர மயூராசனத்தில் எழுந்தருளி தன் குஞ்சித பாதத்தை காட்டி, அபய ஹஸ்தனாக தேவியரோடு காட்சி தரும் ஷண்முக வள்ளலை ஒரு முறை தரிசிக்கினும் கண்ணை விட்டு நீங்காத பேரழகன் அவன்.

## நிறைவு

நல்லூரை குறித்து சொல்ல எத்தனையோ செய்திகள். முகாமைத்துவ நேர்த்தி, சுற்றிலுமிருக்கும் பண்பாட்டுச் சூழல், கலை வடிவங்கள், வேத சம்ரக்ஷணை, திருமுறைக்கான முதன்மை, என்.கே. பத்மநாதன் முதல் இன்றைய விஸ்வ. பிரசன்ன குருக்கள் வரை நீளுகிற கோயிலின் இசைப் பாரம்பரியம், கோயில் மணலில் விளையாடும் குழந்தைகள், குழந்தைகளாகி குதூகலிக்கும் பெரியவர்கள் என்று எவ்வளவோ எவ்வளவோ வியங்களைச் சொல்லலாம்.

**‘தேவ ரம்பையமு தீண மங்கைதரு**
**மான ணைந்தபுய தீர சங்கர தியாகர்**
**வந்துறைந(ல்)லூர மர்ந்துவளர் தம்பிரானே’**
**- என்று அருணகிரிநாதர் பாடுவார்.**

நல்லூரின் பெருமாள் அடியார்க்கெளிய பெருமாள். உலகின் எப்பாகத்திலிருப்பினும் அவன் நாமம் சொல்வோம். அவன் எம் எல்லோரையும் வாழ வைப்பான்.







ST.ANTONY'S
Computer
» மடிக்கணனிகள்
» மேசைக்கணனிகள்
» கண்காணிப்புக் கமராக்கள்
» போட்டோ பிரதி இயந்திரங்கள்
HD-TVI
TURBO HD
hp
acer
DELL
Pioneer secu
021 222 4865, 075 069 8608
இல.189, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
#189, K.K.S Road, Jaffna Town


இளவரசி
சேலைச்சோலை
பட்டுப்
புடவைகளின்
சாம்ராஜ்யம்
ELAVARASI TEXTILES
125, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
0094777315087,0212222503,
0094768079080
Vehicle Parking Available
Master Gaer Greadit Card Accepted


NEW SUNRISE MEDI CLINIC &
YARL BABY NEEDS
புதிய சன்றைஸ் மெடி கிளினிக் & யாழ் பேபி நீட்ஸ்
இலங்கை வங்கி அருகாமையில் தற்போது புது பொலிவுடன்
CHANNELLING
X- RAY
ECHO
SCAN
ECG
LAB TESTING
#580, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
021 222 6069
021 222 8460
SUNRISE MEDI CLINIC


நல்லை கந்தனின் தேரினை சிறப்பிக்க...
NFLASH SUPER DETERGENT
Plant : Kondavil East, Kondavil,Jaffna Tel: (+94) 21 221 4520 E-mail: hiclean24@gmail.com
Branch : 607A, K.K.S Road, Jaffna Tel: (+94) 21 222 2855 Fax: (+94) 21 221 4520
Branch : Railway Station Road, Kilinochchi Tel: (+94) 77 963 5551 / 021 228 2529
HOTLINE : 0778162637
TOTAL SOLUTION FOR CLEANING
உங்களுக்கு தேவையான அனைத்துவிதமான
துப்பரவாக்கிகளும், மிருதுவாக்கிகளும்
அதற்கான உபகரணங்களும்
HI CLEAN
WASHING LIQUID & WASHING POWDER

# நல்லைநகர் நாயகனே தேரேறி வா!



ஈராறு முகமுடையாய் தேரேறி வா
எல்லோரின் இடரகலத் தேரேறி வா
தொல்லைதரு துட்டர்தமை துடைத்தெறிய வா
நல்லைநகர் நாயகனே தேரேறி வா

நல்லூரான் தேரிழுக்க நாடெல்லாம் வந்திருக்க
எல்லையில்லா மகிழ்வுடனே எல்லோரும் வடம்பிடிப்பார்
அல்லலினை அகற்றுவென அடியார்கள் வேண்டிடுவார்
நல்லைநகர் வேல்முருகா நல்லருளைத் தந்திடையா !

தேரென்று சொன்னாலே ஊர்முழுக்கக் கூடிநிற்கும்
யார்யாரே வருவார்கள் தேரிழுத்துத் தரிசிப்பார்
ஊர்முழுக்க ஆவலுடன் ஒன்றுகூடி வந்துள்ளார்
வேலவனே தேரேறி வெளிச்சமதைக் காட்டிடுவாய் !

காவடிகள் வீதியெலாம் கணக்கின்றி வந்துவிடும்
காளையரும் கன்னியரும் களிப்புடனே குவிந்திடுவார்
குழந்தைகளின் குதூகலத்தால் கோவில்வீதி களைகட்டும்
குமரனே தேரேறி குறைபோக்க வந்திடுவாய்!

வாய்கட்டு கைகட்டு வயிற்றையும் கட்டென்றார்
வாழ்வெல்லாம் சுகமாக வாழ்ந்திடலாம் எனவுரைத்தார்
பத்தியமாய் நாமிருந்தோம் பக்குவமாய் நாமிருந்தோம்
பரமனது திருக்குமரா உன்தேரைப் பார்த்திடவே !



தேரேறி வருங்குமரா திருவருளைத் தந்திடுவாய்
ஊரெல்லாம் உனையணுகி உவந்தேற்ற விரும்புகிறார்
பேரக்கர் பெருந்துயரை வேரோடு அழிந்தவனே
பேதலிக்கும் அடியவரைப் பேணிடுவாய் முருகையா!

நல்லூரான் தேர்காண நாளெண்ணிப் நாமிருந்தோம்
நல்லூரில் பண்ணிசைக்க பலபேர்கள் காத்திருந்தார்
அத்தனையும் நிறைவேறும் காலமதைத் தந்துவிட்டாய்
அருட்குமா தேரேறி அருள்பொழிய வந்திடையா!

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர், மெல்பேண், ஆஸ்திரேலியா













காலைக்கதிர் Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 103

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## தோசைகள் இரண்டு பக்கமும் வேகும்




பின் நாளில்களில் நீதிக்கான சர்வதேச ஆயத்தின் தலைவராக உயர்ந்த நீதியரசர் வீரமந்திரி ஆஸ்திரேலியாவில் இருந்து இயங்கிய போது அவரது செயற்பாடுகளைக் கவனித்துள்ளேன். பழகியும் உள்ளேன்.

பண்பானவர். மத நம்பிக்கை மிக்கவர். நேர்மையான கருத்துக்களை நேரடியாக தெரிவிப்பவர். தூரநோக்கம் கொண்டவர். புத்திசாலித்தனமான கல்வியாளர். அதைப் பற்றி பெருமை கொள்ளாதவர். பெயர்பெற்ற விவாதங்களைக் கையாண்டவர் என்ற பன்முகத் தன்மைகளைக் கொண்டு அவரது பதவிகளின் கனத்தன்மைகளின் ஆதரவால் சிங்களப் புலம்பெயராளர் அவரை பிரச்சாரங்களுக்கு பயன்படுத்தினார்கள். இணக்கங்களுக்கு அவரை முற்படுத்தவில்லை.




தமிழ் மக்கள் பாரபட்சமில்லாமல் நடத்தப்பட வேண்டும் என்பதில் தார்மீகமான கருத்தை அவர் கொண்டிருந்து வெளிப்படுத்தினார். ஆனால் தமிழர் இராச்சியம், பிரதேசம் என்ற கோரிக்கைகளுக்காக சிங்கள இனத்தையும் மக்களையும் தரக்குறைவாகவும் இழிவாகவும் பிரசாரத்துக்கு பேசுவது அபத்தம், முறையல்ல என வாதிடுவார்.

அந்த 1984 – 1986 காலங்களில் தமிழ் மக்களுக்கு ஆதரவாகச் செயற்பட்ட வைத்தியர் இராஜநாயகம் சிட்னியில் இருந்து தமிழீழம் ஏன் நியாயமானது என்ற பிரசாரக் கடிதத்தில் இன்றும் பாவிக்கப்படும் தமிழீழத்தின் வரைபடத்தையும் இணைத்து அனுப்பியிருந்தார்.

அதற்குப் பதில் வரைந்து பிரசாரப்படுத்தப்பட்ட மறுதலிப்பை நீதியரசர் வீரமந்திரியே வரைந்திருந்தார். அதில் தமிழ் மன்னர்களை பற்றிக் குறித்த கருத்துக்களையும், எங்கே பிரதேசங்களை ஆண்டார்கள், இந்த வரைபடங்கள் எல்லாம் எப்படி, எந்த ஆராய்ச்சியாளர்களுக்கும் கிடைக்காமல் முளைத்தன, மலையகப் பகுதிகளையும் புத்தளத்தையும் எப்பொழுது, எவ்வளவு காலம் ஆண்டார்கள் என்று வினாக்களால் தமிழர் தேசியம் என்பதையே கேள்வி உட்படுத்தினார்.

பின்னர் சிட்னி கலாசாலையில் சரித்திரப் பேராசிரியராக அமர்ந்திருந்தவரை அணுகி நீதியரசர் வீரமந்திரிக்கு பதில் கடிதம் அனுப்ப உதவிகள் தமிழர் தகவல் நிலையத்தின் ஊடாகத் தரப்பட்டது. அந்தப் பதிலின் தாக்கத்திற்கு விளக்கமாக நீதியரசர் வீரமந்திரி பின்வரும் விடயங்களைக் குறிப்பிட்டார்:-

"சர்வதேச சட்டங்களில் இவைபற்றி இருக்கும் பலவீனங்களால் பிரிவினைவாதிகள் இந்தப் பிரச்சினைகளை இப்போது மனிதாபிமானம் மற்றும் மனித இன குழுமங்களின் உரிமை மீறல்கள்



என்ற அடிப்படையில் சர்வதேச மயப்படுத்தி வெளிநாட்டு ஊடுருவலர்களுக்கு அத்திவாரம் போடுகிறார்கள்.

"சர்வதேச சட்டத்தில் ஒரு நாடு பிரிவினையாக்கப்பட வேண்டுமானால் அதற்கு சில பண்புகள் அமைந்துள்ளனவா எனப் பார்க்கப்படும். ஒரு குறிக்கப்பட்ட பிரதேசம் மிகத் தெளிவாக அடையாளப்படுத்தப்பட்ட எல்லைக்குள் அமைந்துள்ளதா? அந்த பிரதேச எல்லைகளுக்குள் ஒரு இனம் அல்லது குழுமம் தனியாக, ஒன்றிணைந்து வாழ்வாதாரங்களை நடத்தியுள்ளனவா? அது தன்னிறைவைத் தானாகவும், தனது மதிப்புடனும், சர்வதேச சூழலில் அவர்களது பொருளாதாரத்தை நிலை நிறுத்திக் கொள்ளக்கூடிய ஆற்றல் கொண்டு உள்ளதா? பிறிதொரு விதத்தில் பார்த்தால் ஒரு நாட்டைப் பிரித்து, தனி நாடு அமைக்கப்படுவதால் ஏற்படக்கூடிய சீர்குலைவுகளை முக்கியமாகப் பார்க்க வேண்டும். அதற்கு ஏற்றவாறு போதுமான அளவு பிரதேசத்தை அது கொண்டிருக்குமா என்பதையும் கணிக்க வேண்டும். இந்த ஒவ்வொன்றையும் நீங்கள் கவனித்தால் அப்படியான பண்புகளை இங்கு காண முடியாது. புவியியல் அமைப்பில் தொடர்ந்து இருந்த நிலப்பரப்போ, சரித்திர வாயிலாக பிரிந்தே இருந்த வரலாறோ, தன்னிறைவாகப் பொருளாதாரத்தில் வாழ்ந்ததையோ, ஆதரவின்றி பொருளாதாரத்தையோ வாழ்வாதாரத்தையோ நிலை நிறுத்திக் கொள்ளுமா என்பவை எல்லாம் தனி நாட்டு கோரிக்கையின் எதிர்ப்புறமாகவே செல்கின்றன" – என வாதிட்டார்.

இவற்றைத் தனது சர்வதேச சந்திப்புகளிலும் வலியுறுத்தினார். இந்த பேரினவாதமும் பேராண்மையும் அவரது ஒரு முகம் என்று கருதலாம். அவர் இவற்றால் சிங்கள தேசத்திற்காகப் பணியாற்றிய புத்திஜீவி எனப் பார்க்கப்படுகிறார். அன்றில், நியாயமான அறிவுரை வாதம் எனவும் பார்க்கலாம்.

ஆனால், அரசும், அரசகரும பீடங்களும், நீதித்துறையும், பாதுகாப்பு துறைகளும் பேரினவாதத்தில் வளர்வதற்கு இவர் போன்ற புத்திஜீவிகள் பலர் பின்னணிகளில் இருந்தனர். அவர்கள் ராஜபக்ஷக்களை மட்டுமல்ல, ரணில், பிரேமதாஸவைக் கூட கட்டுப்படுத்தினார்கள். எந்த அரசியல் பகுதியையும் – காலிமுகத்திடல் யதார்த்தங்களைக் கூட – அவர்கள் அரசியல் நடத்த வேண்டுமாயின் மீறுவதற்கு முயற்சிக்கவும் தயங்க மாட்டார்கள்.

இந்தப் பின்னணிகளிலேதான் 1983 இற்கு பிறகு இயங்கிய உள்நாட்டு, புலம்பெயர் தமிழ் மக்கள் தங்களது பிரச்சாரங்களால் இந்தியாவை தங்களுக்காகவும் தமிழ் மக்களுக்காகவும் நகர்த்த முடிந்தது. இந்த நகர்வு 'ஆண்ட பரம்பரையை ஆள வைப்பதற்கு' என்ற அரசியல் கோஷத்தில் வரவில்லை. மனிதாபிமானமும் மனிதநேயமும் (Humanitarian crisis) என்ற அடிப்படையில் நீதியரசர் வீரமந்திரி சுட்டிக்காட்டிய முறைகளில் தான் நடந்தது.

இதனை முதற்கட்டமாகப் பாரம்பரிய பிரதேசங்களை உள்ளடக்கி தனித்துவமான நிர்வகிப்புக்கு கட்டமைப்புக்களை ஜே.ஆர். ஏற்றதே தனது மந்திரி சபைக்கும் நாடாளுமன்றத்திற்கும் பின்னால, அவர்களுக்கு தெரியப்படுத்தாது, தமது நடைமுறை அதிகாரங்களைப் பாவித்துத்தான். ஆதலால் இவற்றைச் சிறுகச் சிறுகத்தான் பலப்படுத்த வேண்டும் என பிரபாகரனுடனும், விடுதலைப் புலிகளுடனும் அவற்றை ஏற்காவிட்டாலும், அவற்றை நடைமுறைப்படுவதற்கு இடமளியுங்கள் என்று சொல்லி அன்றிருந்த புத்திஜீவிகளால் தலைதலையாய் அடித்து



கேட்கப்பட்டபோது, அவர்கள் ஜே.ஆரையும் நம்பவில்லை. ராஜீவையும் நம்பவில்லை. அவர்களை எப்படியும் அடிகளால் பதப்படுத்த முடியும், இன்னும் நாலு அடிகள் கூட போட்டால் நடக்க வேண்டியது நடக்கும் என்றார்கள்.

புரிதல், தேடல் இல்லாதவர்களின் முன் வைக்கப்படும் கருத்துக்களும், ஏன் வார்த்தைகளும் கூட அர்த்தமில்லாமல் போகலாம். ஆயுதங்களை நம்பி இருந்தவர்களிடமும் அவை ஆபத்தானவை கூட. ஆனால் ஆயுதங்களையும், அதை வைத்திருந்தவர்களையும் கொண்டாடிய காலங்களில் யதார்த்தங்களும் தூர நோக்குகளும் முளை விடுவது கஷ்டமே. இதை உணர்ந்தவர்கள் அப்போது வாளாவிருந்து விட்டனர்.

(வளரும்...)

காலைக்கதிர் Kalaikkathir

# அரசாங்கம் போராட்டகாரர்களை அச்சுறுத்தி அடக்க முயற்சிக்கிறது!

## அதற்கு அஞ்சோம் என்கிறார் சுனில் வட்டகல



அரசாங்கம் போராட்டகாரர்களை அச்சுறுத்தி அடக்க முயற்சித்து வருவதாகவும் அவற்றுக்கு அஞ்சப் போவதில்லை என சட்டத்தரணி சுனில் வட்டகல தெரிவித்துள்ளார்.

காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் தொடர்ச்சியாக கைது செய்யப்படுவதற்கு எதிராகவும், தற்போது அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் அடக்குமுறைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தும் மருதானை சி.எஸ்.ஆர் மண்டபத்தில் காலிமுகத்திடல் போராட்டக்களத்தின் ஒரு குழுவினரால் ஊடகசந்திப்பொன்று நடைபெற்றது.

இந்த் ஊடகசந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில் –

சம்பந்தப்பட்ட அனைத்து செயற்பாட்டாளர்களுக்கும் இழப்பீடு செலுத்த நேரிடும் என்று கூறி கைது செய்ய போகின்றனர்.

எரங்க குணசேகரவுக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது. வழக்கு அறிக்கைகளை நாங்கள் ஆய்வு செய்தோம். எந்த வழக்கு அறிக்கைகளிலும் எரங்க குணசேகரவுக்கு எதிராக எந்த பிடியாணையும் பிறப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

பிடியாணை இருக்கின்றது என்று கூறி கைது செய்ய வீட்டுக்கு வருகின்றனர். 11 பேர் கொண்ட பொலிஸ் குழு, இரண்டு தினங்களில் 5 தடவை எரங்க குணசேகரவின் வீட்டுக்கு வந்து சென்றது.

5 முறை வந்து பிடியாணை இருப்பதாகக் கூறினர், பிடியாணையை காட்டுமாறு கூறினால், அதனைக் காட்டாமல் திரும்பி செல்கின்றனர். இல்லாத பிடியாணையை எப்படிக் காட்டுவார்கள்?

வீடுகளுக்கும், பகிரங்க இடங்களுக்கு சென்று செயற்பாட்டாளர்களை அடக்குவோம் என்ற சமிக்ஞைகளைக் காட்டுகின்றனர். நாங்கள் அவற்றுக்கு பயப்பட போவதில்லை.

இதன் காரணமாக சட்டத்தரணிகள் என்ற வகையில் அனைத்து இடங்களுக்கும் வந்து கண்காணித்து வருகின்றோம். அதற்கு அப்பால் தலையீடுகளை மேற்கொள்வோம்.

நாடாளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்த வெளியிட்டுள்ள கருத்துக்கள் சமூக ஊடகங்கள் காணப்படுகின்றன. கைது செய்து வரும் எண்ணிக்கைக்கு அமைய நீதிபதிகள் பிணை வழங்குவதாக அவர் கூறியுள்ளார்.

நாங்களா நீதிமன்றத்தை அவமதிக்கின்றோம்? சட்டமா அதிபர் திணைக்களத்தின் சில அதிகாரிகள் போராட்டகாரர்களுக்கு ஆதரவு வழங்குகின்றனர் எனவும் நீதிபதிகள் போராட்டகாரர்களுக்கு பிணை வழங்குகின்றனர் எனவும் சனத் நிஷாந்த கூறியுள்ளார்.

சாட்சியங்கள் இல்லாவிட்டால் பிணை வழங்கி விடுதலை செய்வதே நீதிபதிகளின் பணி. நீதிமன்றத்துக்குக் கொண்டு வரப்படும் அனைவரையும் விளக்கமறியலில் வைக்க வேண்டும் என்று அவர் நினைக்கின்றார். அரசாங்கத்தின் நோக்கமும் அதுதான் என சுனில் வட்டகல கூறியுள்ளார்.

# ரணில் ராஜபக்ஷவையும் இந்த அரசையும் இளைஞர், யுவதிகள் விரட்டி அடிப்பார்கள்!

## எரங்க குணசேகர சபதம்



நாட்டின் இளைஞர், யுவதிகள் ரணில் ராஜபக்ஷவையும் இந்த அரசாங்கத்தையும் கட்டாயம் விரட்டியடிப்பார்கள் எனவும் அதனை சட்டங்களால் தடுத்து நிறுத்த முடியாது என எரங்க குணசேகர தெரிவித்துள்ளார்.

காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் தொடர்ச்சியாகக் கைது செய்யப்படுவதற்கு எதிராக மருதானை சி.எஸ்.ஆர். மண்டபத்தில் காலிமுகத்திடல் போராட்டக்களத்தின் ஒரு குழுவினரால் ஊடகசந்திப்பொன்று நடைபெற்றது.

இந்த ஊடகசந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில் –

ரணில் ராஜபக்ஷ முன்னெடுத்து வரும் அடக்குமுறைக்கு எதிராக கூட்டு ஊடகவியலாளர் சந்திப்பை நடத்தினோம்.

நான் அந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டேன். வங்கி கொள்ளையில் ஈடுபட்டு மிகப் பெரிய குற்றத்தை செய்தது போல் சுற்றிவளைத்து என்னைக் கைது செய்ய பொலிஸார் தேடினர்.

தோழர் வட்டகல கூறியமை போல் நான்கு, ஐந்து முறை வீட்டுக்கு வந்தனர். அயல் வீடுகளில் உள்ளவர்களிடம் வாக்குமூலம் பெற்றுக்கொண்டுள்ளனர்.

சட்டங்களுக்குள் புகுந்து எங்களை அச்சுறுத்த முயற்சிப்பார்கள் என்றால் அது வெறும் கேலிக் கூத்தாகவே இருக்கும் என்பதை ரணில் விக்கிரம சிங்கவுக்குக் கூறி வைக்கின்றோம்.

ரணிலுக்கு மக்களின் ஆணையில்லை. மக்களின் ஆதரவுமில்லை. மக்களின் பலமும் இல்லை. அவருக்கு அடுத்து என்ன நடக்கும் என்பது தெரியும்.

நாட்டின் இளைஞர், யுவதிகள் ரணில் ராஜபக்ஷவையும் இந்த அரசாங்கத்தையும் கட்டாயம் விரட்டியடிப்பார்கள். அதனை சட்டங்களால் தடுத்து நிறுத்த முடியாது.

எங்களைக் கைது செய்து, வசந்தவைக் கைது செய்து, ஏனையோரைக் கைது செய்தாலும் அவர்களுக்கு ஏற்பட வேண்டிய நிலைமை கட்டாயம் ஏற்படும்.அது ஜனநாயக ரீதியாக நடக்கும்.

இதனால், எம்மை அச்சுறுத்த முடியாது என்பது எமக்குத் தெரியும். நான் அறிந்த வரை எனக்கு எதிராக எந்த பிடியாணையும் இல்லை.

சட்டத்தை புறந்தள்ளி விட்டுச் செல்லவும் நாங்கள் முயற்சிக்க மாட்டோம். நாங்கள் பகிரங்கமாகப் பணியாற்றுவோம். அவர்களால் முடிந்ததை அவர்கள் செய்யட்டும்.

நாங்கள் ஜனநாயக வழியில் மோதுவோம். ரணிலையும் இந்த அரசாங்கத்தையும் விரட்டியடிப்பதை நிறுத்த மாட்டோம். கட்டாயம் நாங்கள் அதனைச் செய்வோம்.

நாங்கள் போராட்டம் நடத்துவோம். அனைவருடனும் தலையீடுகளை மேற்கொள்வோம். ரணிலிடம் இருக்கும் சிறிய விளையாட்டுக்களுக்கு நாங்கள் பயப்பட மாட்டோம். – என்றார்.









கலாசாலை வீதி, திருநெல்வேலியில் உள்ள யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தில் அமைந்திருந்த ஸ்ரீ வித்யா கணபதி ஆலயத்தின் அஷ்ட பந்தன பிரதிஷ்டா இன்று (24) புதன் கிழமை அதிகாலை இடம்பெற்றது.

# பயங்கரவாதச் சட்டங்களை நீக்க சிங்கள – பௌத்த ஆதரவு வேண்டும்

## தொழிற்சங்கம் கோரிக்கை

நாட்டில் பயங்கரவாதம் இல்லாத அரசியல் பின்னணியில், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் இந்த நாள்களில் மேற்கொள்ளப்படும் கைதுகள் ஊடாக சட்டம் தவறாகப் பயன்படுத்துவதாக, சுதந்திர வர்த்தக வலய ஊழியர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பழைமையான தொழிற்சங்கம் ஒன்று கண்டித்துள்ளது.

கைது செய்யப்பட்ட அனைவரையும் உடனடியாக விடுவிக்குமாறு கோரி, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உடனடியாக நீக்குமாறு அரசாங்கத்தை வற்புறுத்த தெற்கில் உள்ள சிங்கள பௌத்த சமூகமும் முன்வர வேண்டும் என சுதந்திர வர்த்தக வலய மற்றும் பொதுச் சேவை ஊழியர் சங்கம் வலியுறுத்துகிறது.

மனித உரிமை அமைப்புக்கள் மற்றும் சர்வதேச நிறுவனங்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இல்லாதொழிக்குமாறு அரசாங்கங்களுக்கு தொடர்ந்து அழுத்தம் கொடுப்பதன் பின்னணியில், பாதுகாப்புப் படையினர் இந்தச் செயலைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும் என சுதந்திர வர்த்தக வலயங்கள் மற்றும் பொதுச் சேவை ஊழியர் சங்கத்தின் இணைச் செயலாளர் அன்டன் மார்கஸ் அறிக்கை ஒன்றின் ஊடாகக் கோரிக்கை விடுத்துள்ளார்.

72 மணித்தியாலங்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே மற்றும் மேலும் இருவர் தொடர்பான விசாரணைகளைக் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் ஓகஸ்ட் 21ஆம் திகதி பொறுப்பேற்றுள்ளது.

மேலும், பொலிஸ் மா அதிபர் அரசாங்கத்துக்கு எதிரான சதியில் ஈடுபட்டுள்ளார்களா என ஆராயுமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு அறிவித்துள்ளது.

இதேவேளை பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ஊடகங்களுக்குத் தெரிவித்ததை நினைவுகூர்ந்த தொழிற்சங்க தலைவர், அரசாங்கத்துக்கு எதிரான எதிர்ப்பை ‘சூழ்ச்சி’ என அழைப்பதால் அது தண்டனைக்குரிய குற்றமாகாது, ஏனெனில் அரசாங்கத்தை மாற்றுவதற்கான உரிமை மக்களின் முழுமையான உரிமையாகும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதுள்ள சட்டங்களின் படி, அரசுக்கு எதிரான சூழ்ச்சி மாத்திரமே குற்றம். அரசியல் தலைவர்கள், ஊடகங்கள் உட்பட பலர் ‘அரசாங்கம்’ என்பதை ‘அரசு’ என பயன்படுத்துவதால், அரசாங்கத்துக்கு எதிரான சூழ்ச்சிகளை அரசுக்கு எதிரான சூழ்ச்சி எனக் கருத முடியாது.

கைது செய்யப்பட்டவர்கள் வன்முறையில் ஈடுபட்டனர் எனவும், அமைதியைக் குலைத்தனர் எனவும், அவர்களுக்கு எதிராக விதிக்கப்பட்ட நீதிமன்ற உத்தரவை மீறினர் எனவும் குற்றச்சாட்டுகள் எழுந்தால், பயங்கரவாதத் தடைச் சட்டம் சட்டத்தின் கீழ் கையாள்வது அவசியமில்லை என சுட்டிக்காட்டியுள்ள தொழிற்சங்கத் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ், அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே, ஹசாந்த குணதிலக்க மற்றும் கல்வல சிறிதம்ம தேரர், ஆகியோரை 90 நாள்கள் தடுத்து வைத்து விசாரணை நடத்துவதற்கு பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனுமதி வழங்கியுள்ளார் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# ஜனாதிபதி ரணில் ஜப்பான் சென்றதன் பின் இலங்கை வருவார் கோட்டாபய ராஜபக்ஷ!

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் ஜப்பான் விஜயத்தின் பின்னர் இலங்கைக்கு விஜயம் செய்ய முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார் என நம்பகமான வட்டாரங்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

முன்னாள் ஜனாதிபதி மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு இடையில் இடம்பெற்ற தொலைபேசி கலந்துரையாடலின் பின்னரே இது தொடர்பில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



இதன்படி, முன்னாள் ஜனாதிபதி இன்னும் சில வாரங்களுக்கு தாய்லாந்தில் தங்கியிருப்பார் எனவும், கோட்டாபய ராஜபக்ஷ நேற்று (புதன்கிழமை) இலங்கை வருவார் என ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் உதயங்க வீரதுங்க தெரிவித்தமை பொய்யானது எனவும் அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னாள் ஜனாதிபதியின் வருகைக்காக மிரிஹான பகிரிவத்தையில் உள்ள வீட்டுக்கு விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்ற போதிலும், அது பொய்யானது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

தாய்லாந்து வந்தடைந்த பின்னர் பாதுகாப்புக் காரணங்களுக்காக தங்கியிருக்கும் இடத்தை விட்டு வெளியேற வேண்டாம் என பாதுகாப்பு அதிகாரிகள் முன்னாள் ஜனாதிபதிக்கு பணிப்புரை விடுத்திருந்த நிலையில் அடுத்த வாரம் முதல் விசேட பாதுகாப்பின் கீழ் தேவையான இடங்களுக்கு செல்ல அந்நாட்டு பாதுகாப்பு தரப்பினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

## யாழில் பலரின் கவனத்தையும் ஈர்த்துள்ள மணல் சிற்பங்கள்



வரலாற்று சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி கோவிலின் வருடாந்த மஹோற்சவம் நடைபெற்று வருகின்ற நிலையில் ஆலய முன்றிலில் ஒவ்வொரு நாளும் உருவாக்கப்பட்டு வரும் மணல் சிற்பங்கள் பலரின் கவனத்தையும் ஈர்த்துள்ளன.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது –

யாழ்ப்பாணம், வேலணையைச் சேர்ந்த சுப்பிரமணியம் சுகுமார் என்பவரால் உருவாக்கப்பட்டு வருகின்ற இந்த மணல் சிற்பங்கள் பக்தர்களைப் பெரிதும் கவரும் வகையில் உள்ளது.

உள்நாட்டு பக்தர்கள் மட்டுமன்றி வெளிநாட்டவர்களும் மிகுந்த ஆர்வத்துடன் இந்த மணல் சிற்பங்களைப் பார்வையிட்டு வருகின்றனர்.

அரச உத்தியோகத்தரான இவர், தனது சந்தோசத்துக்காகவும், பார்க்கின்ற ஏனையவர்களின் சந்தோசத்துக்காகவும் இந்த மணல் சிற்பங்களை வடிவமைத்து வருகிறார் எனத் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற நல்லூர் மஹோற்சவங்களின் போதும் இவர் மணல் சிற்பங்களை வடிவமைத்தமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கையில் புனர்வாழ்வு பணியகத்தை அமைப்பதற்கு அரசாங்கம் அங்கீகாரம்!

போதைக்கு அடிமையானவர்கள், போராளிகள் மற்றும் வன்முறை தீவிரவாத குழுக்களின் உறுப்பினர்களுக்காக புனர்வாழ்வு பணியகம் ஒன்றை அமைக்க எதிர்பார்ப்பதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

பணியகத்தை அமைப்பதற்கான சட்டமூலத்துக்கு இந்த வாரம் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் சிகிச்சை, மறுவாழ்வு, பிந்தைய பாதுகாப்பு மற்றும் தொடர்புடைய செயல்பாடுகள் பணியகத்தில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் தற்போதுள்ள புனர்வாழ்வு நிலையங்கள் பல ஆண்டுகளாக சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தன, கந்தகாடு போதைப்பொருள் மறுவாழ்வு மையத்தில் அண்மையில் ஏற்பட்ட சம்பவங்கள் இதற்கு உதாரணங்களாகும்.

இதுபோன்ற மையங்களில் உள்ளவர்கள், தாம், பொறுப்பான அதிகாரிகளால் தவறாக நடத்தப்படுகின்றனர் எனக் குற்றம்சாட்டுகின்றனர்.

இவ்வாறான நிலையங்கள் இலங்கையில் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகத்தின் பணியகத்தின் கீழ் வருகின்றன. மேலும் அவை பெரிதும் இராணுவமயமாக்கப்பட்டவை என விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே அவை, பல்வேறு மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை போன்ற சர்வதேச அமைப்புகளால் கடும் விமர்சனங்களுக்கு உள்ளாகியுள்ளன.

கந்தகாடு சம்பவம் தொடர்பில் தற்போது இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது.


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

### வெளிவாரிப் பரீட்சைகள்
### வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறி

* முதலாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை - 2020 (பழைய பாடத்திட்டம் - மீள்பரீட்சார்த்திகளுக்கானது)
* முதலாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை - 2020 (புதிய பாடத்திட்டம்)

மேற்படி பரீட்சைகளினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் எதிர்வரும் ஒக்ரோபர் மற்றும் நவம்பர் மாதமளவில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப்பரீட்சைக்கு தோற்றத் தகுதியான பரீட்சார்த்திகள் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்திலோ அல்லது www.codl.jfn.ac.lk எனும் இணையத்தள முகவரியிலோ விண்ணப்பப்படிவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்படி பரீட்சைகளுக்கான பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்வதற்கான இறுதித் திகதி; 19.09.2022 (திங்கட்கிழமை) ஆகும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களினை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் (காலை 08.30 மணி தொடக்கம் மாலை 04.15 மணி வரை) சமர்ப்பிக்கலாம் அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்ப விரும்புவோர் கீழ்த் தரப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பிவைக்கலாம்.

**பிரதிப் பதிவாளர்,**
**திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி**

மேலதிக விபரங்களைப் பெறவிரும்புவோர் 021 - 222 - 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

**பதிவாளர்**
**24.08.2022**


## மன்னாரில் 3000 குடும்பங்களை கடனாளிகளாக மாற்றியுள்ள தேசிய வீடமைப்பு அபிவிருத்தி திட்டம்



தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் கடந்த 2018, 2019 ஆம் ஆண்டு 'செமட்ட செவன' மாதிரி செயற்திட்டத்தின் ஊடாக முன்னெடுக்கப்பட்ட வீட்டுத் திட்டத்தின் மூலம் மன்னார் மாவட்டத்தில் பெருமளவு மக்கள் முழுமையாக கடனாளியாகியுள்ளனர் என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இதனைத் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் கூறுகையில் –

மன்னார் மாவட்டத்தில் உள்ள மிகவும் பின் தங்கிய குடும்பங்களை முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்து 5 லட்சம் மற்றும் 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான வீட்டுத் திட்டத்துக்கான செயற்பாடுகளை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி சபை முன்னெடுத்தது.

தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் தங்கள் தற்காலிகமாக வசித்து வந்த குடிசை வீடுகளையும் உடைத்து புதிய வீடு கட்டுமானப்பணியில் ஈடுபட்டோம்.

ஆனால் வீட்டுத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 3 வருடங்கள் கடந்துள்ள நிலையில் வீட்டுத்திட்டம் முடிவடையாத நிலையில் கடனாளிகளாக கடன் சுமையுடன் வாழ்ந்து வருகின்றோம்.

மேலும் இதற்கான நடவடிக்கைகளை உரிய அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும். எங்களுக்காக சிறிய வீடு ஒன்றாவதும் அமைத்துத் தருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

வடக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் இருப்பினும் இந்த விடயம் தொடர்பாக கேள்விகள் எழுப்புவதற்கு யாரும் தயாராக அல்லர் என மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# அன்பர் தேடும் பெருமாளே

கந்தவேள் தன்னை நாடி நாடி
கைகள் தலையேறத் தேடித் தேடி
வந்து குவிவோர்கள் கோடி கோடி - அருளாளே

எந்தை முருகோனும் தேரில் ஏறி
எங்கும் அடியார்கள் இதயம் ஊறி
கந்த முருகேச! என்றே கூறி - களிகூர

எங்கும் ஒளிவீச ஆட ஆட
நல்லை முருகேசன் தேரை நாட
வந்து ரதம் ஏற அன்பர் கூட - அழுவார்கள்

துள்ளு வடிவேல் மாதர் தாமும்
நல்ல அடியார்கள் கண்கள் தோய
தெள்ளு தமிழ் பாட தேரில் ஏறி - வருவார்கள்


வந்து ரதம் ஏற வேலன் தானும்
முந்தும் அடியார்கள் முன்னே கூடி
சிந்தை களிகூர கந்தன் நாமம் - பொழிவார்கள்

மெல்ல ரதமாட மின்னும் கந்தன்
தங்க ஒளி வீசித் தேரில் நின்று
பொங்கும் அருளீந்து அன்பர் தம்மை - கவர்வானாம்

பங்கம் அது தீர பாரில் தேரும்
வங்கம் என நின்ற அடியார் காண
தங்கு தடையின்றி ஊர்ந்தே வீதி - தனில் ஓடும்

நல்லை வடிவேலன் பாதம் நாடி
தொல்லை அதுதீர கீதம் பாடி
வெள்ளை மனதோடு அன்பர் தேடும் - பெருமாளே







# தேன் தமிழைக் காத்தளித்த பெருமாளே

ஊர் முழுதும் ஒன்றி வர ஓடுகிற தேரதனில்
ஒப்பரிய ஆறுமுகன் உவந்து ஏற
நீறு பொலி நெற்றியுடன் நெஞ்சுருகக் கந்தனவன்
நீள் கழல்கள் நினைவிருத்திக் களிகூர
பார் முழுதும் கேட்டிடவே பக்தியுடன் தமை மறந்து
பண் அதனில் இயல் கலந்து பரிமாறி
ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம்
ஆறுமுகம் ஆறுமுகம் என்று ஓதும்
வீறுடைய நல்லையதும் விண்ணகராம் என மயங்கி
வேல் பிடித்த கந்தனவன் தனை நாடி
மாறுபட தேவரெலாம் மகிழ்வுடனே ஓடிவர
மண்ணதனை விண்ணாக்கும் வடிவேலன்
சூருடைய மார்பிளந்து சொல்லரிய புகழ் வளர்த்தோன்
தூ மடந்தை இருவருமே துணை சேர
தேரதனில் அன்பரெலாம் தேம்பி அழ வரும் அழகன்
தேன் தமிழைக் காத்தளித்த பெருமாளே!

# வந்து அருள் புரிவன் நல்லை வடிவேலன்

முந்து அருள் முறுவல் கூட
சிந்து அணி மணிகள் சேர
வந்து அருள் புரிவன் நல்லை - வடிவேலன்



பந்தம் உற அடியார் தங்கள்
முந்து துயர் முழுதும் தீர
வந்து புகும் நல்லூர் தன்னில் - வளம்சேர

பொங்கும் மணியோசை தன்னில்
பங்கம் உறும் தீமை எல்லாம்
எங்கும் ஒளி வீசும் நல்லை - வடிவேலும்

கந்த வடிவேலன் தன்னின்
முந்துகிற வேலைக் கண்டு
சிந்தை மகிழ் அன்பர் எல்லாம் - துயர் தீர

கந்தனவன் தனிவேலோடும்
வந்து அருள் இரு மாதோடும்
சந்தமிகு தமிழை நாடி - வருவானாம்

வெள்ளம் என அடியார் கூடி
உள்ளமதில் முருகோன் தன்னை
வெல்லு தமிழ் அதனால் போற்றிப் - பொழிவார்கள்

நல்லை இது அல்ல தெய்வர்
நாடெனவே தேவர் போற்றும்
சொல்லரிய வேலன் தன்னின் - திருஊரும்

முந்து தமிழ் அதனால் யாரும்
முருகனவன் தனையே தூற்றி
சொல்லிடினும் அருளே செய்யும் - பெருமாளே.

# பங்கரவாதத் தடைச்சட்டத்தை பயன்படுத்துவதைத் தவிர்க்குக!

## சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை

பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறும், தடுப்புக் கட்டளைகளை உடனடியாக இரத்துச் செய்யுமாறும் ஜனாதிபதி மற்றும் சட்ட அமுலாக்க அதிகாரிகளுக்கு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது. இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், இது தொடர்பில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களில் ஈடுபட்டுள்ள நபர்களைக் கைது செய்வதற்கும் தடுத்து வைப்பதற்கும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் விதிகள் பயன்படுத்தப்படுகின்றன.

ஐரோப்பிய ஒன்றியத்தால் இலங்கைக்கு வழங்கப்படும் ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகை நீடிப்பு விடயத்தில் பயங்கரவாத தடைச் சட்டத்தைப் பயன்படுத்துவது கவலைக்குரிய விடயமாகப் பார்க்கப்படுகிறது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் துஷ்பிரயோகம் ஜெனிவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிலும் மீண்டும் மீண்டும் எழுப்பப்பட்டது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் பயங்கரவாதம் பற்றிய தெளிவான வரையறை இல்லாத நிலையில், கருத்து வேறுபாடுகளின் நியாயமான வெளிப்பாடுகளை நசுக்குவதற்கும், அமைதியான பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரம் உள்ளிட்ட ஜனநாயக உரிமைகளைப் பயன்படுத்துபவர்களைக் குறிவைப்பதற்கும், இந்த சட்டம், தவறாகப் பயன்படுத்தப்படும் அபாயம் உள்ளதாக சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

# ஈஸ்டர் குண்டும் தாக்குதல் விசாரணைகளுக்காக இலங்கை வரும் ஸ்கொட்லன்ட்யார்ட் பொலிஸார்!

கொழும்பு, ஒக. 25

உயிர்த்த ஞாயிறு தற்கொலைத் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடாத்துவதற்காக ஸ்கொட்லன்ட்யார்ட் பொலிஸார் இலங்கை வருகை தரவுள்ளனர்.

ஜனாதிபதி செயலகத்தின் பேச்சாளர் ஒருவர் இந்தத் தகவலை தெற்கு ஊடகமொன்றிடம் தெரிவித்துள்ளார்.

கடந்த 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தத் தாக்குதல் தொடர்பில் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள நிலையில், இது தொடர்பில் சுயாதீன விசாரணை நடத்தும் நோக்கில் ஸ்கொட்லன்ட்யார்ட் பொலிஸார் இலங்கை வருகை தரவுள்ளனர்.

ஈஸ்டர்தாக்குதல்தொடர்பில்இதுவரையில் சுயாதீனமான விசாரணைகள் நடத்தப்படவில்லை என கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்த குற்றச்சாட்டு தொடர்பில் கவனம் செலுத்திய ஜனாதிபதி, ஸ்கொட்லன்ட்யார்ட் பொலிஸாரை அழைத்து சுயாதீன விசாரணை நடத்தத் தீர்மானித்துள்ளார் என ஜனாதிபதி செயலக பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.08.2022இல் வெளியிடப்பெற்றது.